செய்தி வெளியீடு எண்: 30 நாள் :16.10.2019

**தேனி மாவட்டம்**

**நோய் தடுப்பு மற்றும் தூய்மை பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்., இ.ஆ.ப.,அவர்கள் பொதுமக்கள் வசித்து வரும் குடியிருப்பு பகுதிகளுக்கு நேரடியாக சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார் :-**

******

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாலசமுத்திரம் மற்றும் திம்மரசநாயக்கனூர் ஆகிய ஊராட்சிப்பகுதிகளில், தூய்மை பணிகள் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்து இன்று (16.10.2019) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ்., இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்கள் வசித்து வரும் குடியிருப்பு பகுதிகளுக்கு நேரடியாக சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, தெரிவித்ததாவது,

தமிழக அரசு டெங்கு காய்ச்சல் மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டு வருகிறது. நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதன் மூலம் டெங்கு காய்ச்சல் உள்ளிட்டவைகள் பரவாமல் தடுக்கப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் வடகிழக்கு பருவ மழை அதிக அளவு பெய்வதற்கான வாய்ப்புகள் உள்ளது. மேலும், மழைக்காலம் என்பதால் மழை நீர் தெருக்களில் அதிக அளவு தேங்கிட வாய்ப்பு உள்ளது. இதன்மூலம் நல்ல நீர் மற்றும் மழைநீர் போன்றவற்றில் மட்டுமே டெங்கு கொசு உற்பத்தியாகும். டெங்கு காய்ச்சல் ஏ.டி.எஸ். என்ற பெண் கொசு மூலம் பகல் நேரத்தில் மட்டுமே மனிதர்களை கடித்து டெங்கு காய்ச்சலை பரப்புகிறது.

டெங்கு காய்ச்சல் பாதித்த நபரை கடித்த கொசு, டெங்கு பாதிப்பில்லாத வரை கடிக்கும் பொழுது டெங்கு காய்ச்சல் பரவுகிறது. டெங்கு காய்ச்சல் தண்ணீர் மற்றும் காற்று மூலம் பரவாது, டெங்கு பாதித்தவரின் இருமல், தும்மல் மற்றும் எச்சில் ஆகியவை மூலம் டெங்கு காய்ச்சல் மற்றவர்களுக்கு பரவாது. டெங்கு காய்ச்சலின் அறிகுறிகளான தலைவலி, தசைவலி, கண்வலி, உடலில் அரிப்பு, மூட்டுவலி மற்றும் வாந்தி ஏற்படும் பொழுது அருகில் அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை பொதுமக்கள் அணுகி ஏழு நாட்களுக்கு மருத்துவ சிகிச்சை பெற்றால் குணமடைந்துவிடும். சாதாரண காய்ச்சல் நீடித்தால் இரத்தப் பரிசோதனை செய்ய வேண்டும். இரத்த பரிசோதனை மூலம் மட்டுமே டெங்கு காய்ச்சலா என்பதனை உறுதி செய்ய முடியும்.

பொதுமக்கள் தண்ணீரை தேவைக்கு அதிகமாக தொட்டிகளிலோ, பாத்திரங்களிலோ சேமித்து வைக்காமல் இருக்க வேண்டும். சேமித்து வைக்கப்பட்ட தண்ணீரை நன்றாக மூடி வைத்து பாதுகாத்திட வேண்டும். குடியிருப்பு பகுதிகளில் தேவையற்ற பிளாஸ்டிக் பொருட்கள், டயர், தேங்காய் ஓடுகள், உடைந்த மண்பாண்டங்கள் ஆகியவற்றை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். புழக்கத்தில் இல்லாத உரல், ஆட்டுக்கல், கல்தொட்டி போன்றவைகளை கவிழ்த்து வைப்பதோடு, தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்திட வேண்டும்.

எனவே, பொதுமக்கள் தங்களது குடியிருப்பு மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் சுற்றுப்புற சூழ்நிலைகளை சுத்தமாகவும், சுகாதாரமும் வைத்து கொள்ளுவதோடு மட்டுமல்லாமல், அரசு அலுவலர்கள் தங்களது பகுதிக்கு ஆய்வு மேற்கொள்ள வருகை தருகின்ற போது முழு ஒத்துழைப்பு அளித்து முழு சுகாதாரமான மாவட்டமாக உருவாக்கிட தங்களது பங்களிப்பினை அளித்திட வேண்டும் என தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, திம்மரசநாயக்கனூர் ஊராட்சிக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, அங்கன்வாடி மையத்தில் கற்பித்தல் முறை, சுகாதாரம் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவு முறைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

ஆய்வின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் செயற்பொறியாளர் எஸ்.கவிதா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரெங்கராஜ், ஆண்டாள் உட்பட சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

***வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.***